தர்மஜோதி வெளியீடு நெ. 9.

மந்த்ர சாஸ்திர தத்வ விளக்கம்.

757
1-56

OFFICE OF THE

ஆக்கியோர் :
ராவ்சாகேப் பி. கே. ஷண்முகநாதன் பி. ஏ., பி. எல்.,

வெளியிடுவோர் :
தர்மஞான தமிழ் பிரசுர சங்கம் (அடையார்)
திருவாரூர்.

பதிப்பிடம் :
நமச்சிவாயம் அச்சகம் திருவாரூர்.

10.] 1956 [பதிப்புரிமை.

417
N56.
57

மந்த்ர சாஸ்திர தத்வ விளக்கம்.

ராவ்சாகேப். பி. கே. ஷண்முகநாதன் பி. ஏ., பி. எல்.

ஹிந்து சமயத்திலும், சமுதாயத்திலும் மந்த்ரம் என்பது ஒரு விசேஷ ஸ்தானத்தை வகிக்கின்றது. அதன் உண்மையை யறியாதவர்கள் அதை ஓர் மூட நம்பிக்கை என்றே கருதுகிறார்கள். தன்னால் அறிய முடியாத தெல்லாம் அர்த்த மற்றவை என்ற மனப்பான்மை யுள்ள பலராலும் இவ்வாறே கருதப்படுகின்றது. அவர்கள் மீதும் குறை சொல்வதற் கில்லை. மந்த்ர சாஸ்திரம் என்பது மறை பொருளாகவே கருதப்படுவது மட்டு மல்லாமல் சில விசேஷ யோக்கியதை அடைந்த வர்களே அவற்றை அறிய முடியுமென்ற வரம்பும் வகுத்து இருப்பதாலும், மந்த்ர சாஸ்திரங்கள் யாவும் வடமொழியிலேயே இருந்து வந்ததாலும், மந்த்ரங்களைப்பற்றித் தவறான அபிப்பிராயம் நிலவி வருவது ஆச்சர்ய மில்லை.

67957

முற் காலத்தில், மக்களுக்கு ஆன்றோர் வாக்குகளில் நம்பிக்கை இருந்தது. இக்காலத்தில் பகுத்தறிவின் பெயரால் நம்பிக்கை நசித்து வருகின்றது. ஆழ்ந்து சிந்திக்கும் பகுத்தறிவுத் தோழர்களுக்கும் சில விஷயங்களில் நம்பிக்கையைக் கைக்கொள்ளத்தான் வேண்டி யிருக்கிறது. நம்பிக்கையே உலகத்தை இயக்குகிறது என்றுகூடக்கூறலாம். இவ்வுலகம் இந்நிலையிலேயே நாளையும் இருக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இல்லையானால் முயற்சி, தொழில், இன்பம் யாவும் இல்லாமல் மறைந்துவிடும். நம்பிக்கை என்பது அன்பின் விளைவு. அன்பு இருக்கும் இடத்திலேயே நம்பிக்கையும் இருக்கும். ஆகவே, நம்பிக்கையில்லை என்றால் அன்பும் இல்லை என்றுதான் பொருள்.

O2;417
N56

ஆன்றோர் வாக்குகளில் நம்பிக்கைக் கொண்டிருந்த நமது முன்னோர் மந்த்ரங்களை மூட நம்பிக்கையாகக் கருதவில்லை. அவற்றை விசேஷ சக்திகள் வாய்ந்தவைகளாகக் கருதி அவற்றைப் போற்றியும் வந்தார்கள். மந்த்ரங்களை அறியவும், பிரயோகம் பண்ணவும், விசேஷ அருகதை வேண்டும் என்பதையும் உணர்ந்தார்கள். இந்த விசேஷ யோக்யதைகளை தீக்ஷையென்றும், குரு உபதேசம் என்றும், அவற்றை ஒரு மனிதன் தன் பூர்வ புண்ணிய பலனாலேயே அடைவான் என்று நம்பினார்கள். இத்தகைய நம்பிக்கைகளுக்குத் தற்கால விஞ்ஞான உலகில் இடம் இருக்கின்றதாவென்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மந்த்ர சாஸ்திரம் பற்றிய பூரா விவரங்களையும் இங்கு கூறுவதற்கியலாது. ஆயினும் அவற்றில் ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது. அதுவும் தற்கால விஞ்ஞான அறிவுக்கேற்ப அமைந்திருக்கின்றது. அதில் பகுத்தறிவுக்கு முரணானது எதுவும் இல்லை என்பதை ஒரு சிறிதளவாவது நிரூபித்துக் காட்டுவதே நோக்கம்.

முதலில், ஒரு எச்சரிக்கை. மந்த்ரங்களைப் பற்றி எழுத முன் வருவது ஓர் சாமான்யமான காரியமல்ல. மந்த்ர சாஸ்திரம் என்ற தொகுதி சமுத்திரம் போன்று ஆழ்ந்து அகண்டது. அநேக நூல்கள் உள்ளன, பல நூல்கள் மறைந்தும் விட்டன. இருப்பனவற்றில் சிலவும் அச்சாகவில்லை. சிற்சில நூல்களை மேனாட்டு ஆராய்ச்சியாளர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், அவற்றைப் பற்றி எழுதியும் உள்ளனர். மேலும், இந்த சாஸ்திரத் தொகுதியை '**குப்த சாஸ்திரம்**' என்றே கருதி வந்தனர். அதாவது அதி ரகசியமான விஷயம் என்பது பொருள். அநேக மந்த்ரங்களும் பிரயோகங்களும் கர்ண பரம்பரையாகவே குரு சிஷ்ய பரம்பரையில் தொடர்ச்சியாக வந்துள்ளன. இத்தகைய மிகப்பெரிய விஷயத்தைப் பற்றி எழுத முன் வருவது ஒருவாளியில் முகந்த சமுத்திர ஜலத்தை சமுத்திர ஜலம் என்று கூறுவது போலவே யாகும். தற்காலத்திலும் மந்த்ர சாஸ்திரம் அறிந்த விற்பன்னர் பலர் இருக்கின்றனர்.

'மந்த்ரம்' என்ற சொல் வடமொழி **'மன்'** என்ற தாதுவும் **'த்ரா'** என்ற தாதுவும் சேர்ந்து ஆகிய பதம். **'மன்'** என்றால் நினைத்தல் என்று பொருள் (To think). **த்ரா** என்றால் காப்பாற்றுதல் என்று பொருள் (To protect). **மன்** என்ற தாதுவுக்கு இன்னும் அநேக பொருள்கள் இருக்கின்றன. அது ஆகு பெயராய் மனதையும், மனிதனையும் கூடக் குறிக்கும் போலும். ஆகவே **'மந்த்ரம்'** என்ற சொல்லுக்குப் பல பொருள் கூறலாம். மனதால் காப்பாற்றப் படுவது, மனதைக் காப்பாற்றுவது நினைப்பவனைக் காப்பாற்றுவது, நினைப்பினால் காப்பாற்றப் படுவது, என்றெல்லாம் கூறலாம். எல்லாப் பொருளுமே பொருந்தும். அடிப்படையான கருத்து என்னவென்றால் மந்த்ரங்கள் மனனத்துக்கு உரியன என்பதுதான். மனனம் பண்ணுவதால் மனம் ஓர்மைப்பட்டு சித்த சுத்தி ஆகின்றது. ஆதலால் மந்த்ரம் மனதை அல்லது மனதையுடைய மனிதனைக் காப்பாற்றுகின்றது என்று சொல்லலாம்.

மந்த்ரங்கள் நமது ஹிந்து சமயத்தின் பிரத்யேகமான பொக்கிஷங்கள். ஆயினும், பிற மதத்தினரும் சில பதச் சேர்க்கைகளுக்கு விசேஷ சக்தி யிருப்பதாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். பௌத்த மதத்தில் ஹிந்து மதத்தைப் போலவே மந்த்ரங்கள் இருக்கின்றன. அவர்களின் கொள்கைப்படி மந்த்ரங்களை அர்த்தம் தெரியாமலே உச்சரித்தாலும் அல்லது மந்த்ராக்ஷரங்கள் எழுதியுள்ள உருளைகளைச் சுழற்றினாலும் கூட மந்த்ரங்கள் பயனளிக்கின்றன என்பது. **'ஓம் மணி பத்மே ஹூம்'** (Om Mani Padme Hum) **'ஓம், தாமரையிலுள்ள ரத்தினம்'** என்பது பௌத்த மதத்தில் விசேஷமான மந்த்ரம். இந்த மந்த்ரத்தைப் பல முறை எழுதப்பட்ட உருளைகள் மடங்களில் வைக்கப்பட்டிருக் கின்றனவாம். அவற்றை சில முறை சுற்றுவதால் அத்தனை தடவை ஜபித்த தாகுமாம். இவ்வாறு பௌத்த மதத்தை அறிந்தவர்கள் எழுதியுள்ளார்கள். பௌத்த மதம் ஹிந்து மதத்தையே அடிப்படையாகக் கொண்டதால் அம்மதத்தில் மந்த்ரங்கள் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. கிருஸ்தவ மதத்திலும், இஸ்லாமிய மதத்திலும் கூட சில

பதச் சேர்க்கைகளுக்கு விசேஷ சக்தி வாய்ந்ததாகக் கருதப்பட்டு அவற்றை அடியார்கள் ஜபித்து வருகின்றார்கள். இது போன்று, சமீப காலத்தில் நிருவப்பட்ட ராதாஸ்வாமி சமயத்தினரும் மந்த்ரத்தில் நம்பிக்கையுடையவராகவே இருக்கின்றனர்.

இவ்வாறு, வேறு மதத்தினரும் மந்த்ரங்களில் நம்பிக்கையுடையவராய் இருந்தாலுங்கூட நமது ஹிந்து சமயத்தில் மட்டுமே இந்த விஷயத்தை ஆழ்ந்து ஆராய்ந்து அநுஷ்டிக்கப்பட்டு வந்து அவற்றைப்பற்றிய நூல்களும் ஏராளமாய் எழுதப்பட்டும் இருக்கின்றன. ஹிந்துவாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் 'மந்த்ரம்' என்று சொன்னவுடன் அது ஒரு **அமானுஷ்ய சக்தி வாய்ந்த பதச் சேர்க்கை** என்பதை உணருகிறான். இதன் உண்மையை அறிய வேண்டுமானால் சிருஷ்டியின் அடிப்படையான தத்துவத்தை நாம் ஆராயவேண்டும். அவ்வாறு ஆராயும்போது, நாம் ஆச்சரியப்படக்கூடிய முறையில், தற்கால விஞ்ஞானிகள் கூறும் வண்ணமே நமது முன்னோர்களும் சிருஷ்டிக் கிரமத்தைக் கூறியிருக்கிறார்கள் என்பதும் அறியக்கிடக்கின்றது.

சித்தாந்த சாஸ்திரங்களில் பிரபஞ்சமானது **ஷடத்வா** அதாவது ஆறு அத்வாக்களின் வழியே நிற்கின்றது என்று கூறுகின்றன. அத்வா என்றால் வழி; மார்க்கம்; பாதை; பிரயாணம்; என்றெல்லாம் பொருள்படும். ஷடத்வா என்பவை யாதெனில் 1 வர்ணம், 2 பதம், 3 மந்த்ரம், 4 தத்துவம், 5 புவனம், 6 கலை என்பன. இவற்றை சாரதா திலகம் என்ற கிரந்தம்,

"உக்தம் கலாத்வா தத்வாத்வா
புவனாத்வாதிச த்ரயம்
வர்ணாத்வாச பதாத்வாச
மந்த்ராத் வேத்ய பரம் பரம் ||"

என்று கூறுகின்றது. இவற்றில் அகாராதி க்ஷகாராந்தமான எழுத்துக்கள் **வர்ணாத்வா** வென்றும், எழுத்துக்களின் சேர்க்கையாலான பதங்களாலானது **பதாத்வா** வென்றும், மந்த்ரங்களானது **மந்த்ராத்வா** வென்றும், பிரிதிவி முதல் அந்தக்கரணம் ஈறான

24 ஆத்ம தத்வங்களும், காலம் நியதி முதலிய வித்யா தத்வங்கள் 7-ம் ஆக 31 தத்வங்களும் **தத்துவாத்வா** வென்றும், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், என்று சொல்லப்பட்ட புவனங்கள் **புவனுத்வா** வென்றும், நிவிர்த்தி கலை, பிரதிஷ்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தியாதீத கலை என்ற ஐந்தும் **கலாத்வா** வென்றும் கூறப்படும். இவ்வாறு அத்வாக்களும் வழியாகவே பிரபஞ்சம் தோன்றி, நின்று, அழியுமாதலால் அவைகளை **அத்வா** அல்லது **வழி** என்ற பெயரால் குறிப்பிட்டனர். நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு இவை ஒவ்வொன்றையும் விரித்து உரைப்பது தேவையில்லை. நாம் இங்கு அறியவேண்டிய விஷயம் ஒன்றேதான். அதாவது இவ்வாறு அத்வாக்களும் மும்மூன்ருக இரண்டு பகுதிகளாக இருக்கின்றன. வர்ண, பத, மந்த்ர அத்வாக்கள் மூன்றும் சப்த ஸ்வரூபமாய் இருப்பதால் விமர்சாம்சங்களாய் **சக்தி** பாகமாய் இருக்கின்றன. கலா, தத்வ, புவன அத்வாக்கள் மூன்றும் அர்த்த ஸ்வரூபமாயிருப்பதால் பிரகாசாம்சங்களாய் **சிவபாகமாய்** இருக்கின்றன. சுருங்கச் சொன்னல் வர்ணம் முதலிய முதல் மூன்றும் வாயால் சொல்லப்பட்டும், எழுத்தால் எழுதி கண்ணுல் காணப்பட்டும், செவியால் உணரப்பட்டும், இருப்பதால் அவை விமர்சாம்சம், அதாவது சக்தி ஸ்வரூபம். ஏனைய மூன்றும் அர்த்த மாத்திரமாக இருந்து மனதினுலேயே அனுபவிக்கப்படுவதால் பிரகாசாம்சம், அதாவது சிவ ஸ்வரூபம். ஆகவே இரண்டும் சொல்லும், பொருளுமாய் இருப்பன. சொல்லின் பொருளை மனதால் உணரத்தான் முடியும். சொல் என்பது வாயால் பேசப்பட்டு காதால் கேட்கப்படுகின்றது. பொருளோ மனதால் மட்டும் அறியக்கூடியது. உதாரணமாக '**மரம்**' என்று சொல்லுகிறேம். என்ன மரம் என்று கூறுவிடிலும் நம் மனதில் ஓர் உணர்வு ஏற்படுகின்றது. மரம் என்ற சொல்லால் குறிக்கப்படும் அர்த்தம் அல்லது பொருள் அனுபவ மாத்திரமாகவேயிருக்கிறது. அதுபோன்று, வெண்மை, இனிப்பு, முதலிய சொற்களின் பொருள்கள் மனதால் மட்டுமே அறியக்கூடியன. அவற்றை அக்குணங்களை யுடைய பால், தேன் என்ற வஸ்துக்களை காட்டியேதான் குறிக்கவேண்டும். ஆயினும் வெண்மை, இனிப்பு

என்பன பால், தேன் போன்ற பொருள் இல்லாதவிடத்தும் மனதில் ஒரு பாவத்தை, உணர்ச்சியை, அனுபவத்தை உண்டாக்குகின்றனவன்றோ? ஆகவே, இவ்வாறு அத்வாக்களும் சொல்லும், பொருளும் என்ற இரண்டில் அடங்கும். பிரபஞ்சம் பூராவும் சொல்லும் பொருளாகவேயிருக்கின்றது என்பதுதான் அடிப்படையான கருத்து. அதனால்தான் பிரபஞ்சத்தை சொற்கூற்று பிரபஞ்சம் என்றும் பொருள்கூற்று பிரபஞ்சம் என்றும் இரண்டாகப் பேசப்படுகின்றது. காளிதாஸனும்,

" வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தெள
வாகர்த்தப் ப்ரதிபத்தயே "

என்று இதைக் கூறினான், சொல் சக்தி மயம், பொருள் சிவமயம். பிரபஞ்சம் சிவ சக்திகளின் ஸம்மேளனமே தான். சொற்கூற்று பிரபஞ்சம் சக்தி அம்சம் என்றாயிற்று.

சொல் என்பது வடமொழியில் 'வாக்' என்ற பதத்தால் குறிக்கப்படும். 'வாக்' என்பது நான்கு விதமாய் இருக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை, பர, பச்யந்தி, மத்திமை, வைகரி என்பன. இவற்றில் 'வைகரி வாக்கு' தான் வாயால் பேசப்பட்டு காதால் கேட்கப்படுவது. ஏனைய மூன்றும் சூக்ஷ்மம் சூக்ஷ்மதரம், சூக்ஷ்மதமமாக இருக்கின்றன. ரிக்வேதம் 1-வது மண்டலம், 22-வது அநுவாகம், 164-வது சூக்தம், 45-வது ரிக். இதில் வாக்தேவீ மந்த்ரம் கூறப்படுகின்றது. ரிஷி தீர்க்க தமஸ் என்பவர்

சத் வாரி வாக் பரிமிதா
பதானி தானி
விதுர் ப்ராஹ்மணேயே மனீஷிண :।
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
துரீயம் வாசோ மனுஷ்யா வதந்தி ॥

என்பது. அதாவது 'வாக்' என்பது நான்கு விதம் என்று பிருஹ்மத்தை அறிந்த மஹான்களால் அறியப்படுகின்றது. அவற்

றில் மூன்று சூக்ஷ்மமாகக் குஹையில் இருக்கின்றன. சாமான்ய மனுஷ்யர்கள் அதை அறியமாட்டார்கள். நான்காவது தான் மனிதரால் பேசப்படுவது. ரிக் வேதத்தில் இன்னொரு மந்த்ரம்.

" சத்வாரி ச்ருங்காத்ரயோ அஸ்யபாதா த்வே
சீர்ஷே ஸப்த ஹஸ்தாஸோ அஸ்ய |
திருதா பத்தோ வ்ருஷபோ ரோரவீதி
மஹோ தேவோ மர்த்யா ஆவிவேச் || "

இதன் பொருள், கொம்புகள் நான்கு உடையதாய், கால்கள் மூன்றுடையதாய், தலைகள் இரண்டுடையதாய், கைகள் ஏழுடையதாய், மூன்று விதமாகக் கட்டப்பட்டதான ரிஷபம் கர்ஜிக்கின்றது. இவ்வாறு சப்த பிருஹ்மமாகிற கடவுள் மனித சரீரத்தில் புகுந்தார். இந்த மந்த்ரத்துக்குத் தேவதை, அக்னியாகவும், சூரியனாகவும், சப்த பிருஹ்மமாகவும் கூறப்பட்டு அதற்கு ஏற்ப பொருளும் மூன்று விதமாகக் கூறப்படுகின்றது. இங்கு நாம் பதஞ்சலி மஹாபாஷ்யப்படி சப்த பிருஹ்மமாக எடுத்துக்கொண்டு விவரிக்கின்றோம்.

கொம்புகள் நான்காவன:—

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

கால் மூன்றுவது:—

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

தலை இரண்டாவது:—

பர சப்தம், வைகரீ சப்தம்.

கைகள் ஏழாவது:—

ஏழு வேற்றுமைகள்.

மூன்று கட்டுகளாவன:—

நாபி, ஹ்ருதயம், கழுத்து.

இந்த சப்த பிருஹ்மம் என்ற ரிஷபம் கர்ஜிக்கின்றது. இவ்வாறு மனிதனில் புகுந்துக் கொள்ளுகின்றது.

ஆகவே வாக் என்பது நான்கு விதமாகப் பரிணமித்து சரீரத்தில் உலவுகின்றது என்பதுதான் சுருக்கமான கருத்து. வைகரி வாக்கைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை. மற்ற மூன்று நிலைகளையும் மந்த்ர சாஸ்திரம் வாசிக்கின்றவர்கள் அறிந்தே ஆக வேண்டும்.

சப்தம் என்பது பிண்டத்திலும் இருக்கின்றது, அண்டத்திலும் இருக்கின்றது. இவ்விரண்டு விதமாகவும் நாம் சப்தங்களை ஆராயவேண்டும்.

முதலில் அண்டத்தில் உள்ள சப்தங்களைப் பார்ப்போம். சப்தம் என்பது ஓசையாகும்; ஓசை இரண்டு விதம்; சில ஓசைகள் ஒரு பொருளை உணர்த்துகின்றன. சில ஓசைகளுக்குப் பொருளே இருக்காது. இடி முழக்கம், கடலோசை, நீர் வீழ்ச்சி முதலிய வற்றில் உண்டாகும் சப்தங்களுக்குப் பொருள் இல்லை. வடமொழியில் பொருளோடு இசைந்த ஓசையை **சப்தம்** என்றும், பொருளில்லாத ஓசையை '**த்வனி**' என்றும் கூறப்படும். இயற்கையில் பொருளோடு இயைபு இல்லாத ஓசைகள் பல உள. நெருப்பு எரியும்போதும், நீர் அலையும்போதும், மண் சரியும்போதும், ஓசைகள் உண்டாகின்றன விஞ்ஞானிகள் இந்த ஓசையை 'Displacement of air by motion of bodies' என்று விளக்குகிறார்கள். அதாவது, வஸ்துக்கள் நிலை பெயரும்போது உண்டாகும் காற்றின் அசைவே ஓசையாகும் என்று. ஆகவே ஓசைக்கு முதற் காரணம் அசைவு அல்லது சலனம். அசைவு உண்டானபோது ஓசை இருக்கும். ஓசையைக் கேட்டால் அசைவு உண்டு என்று அனுமானிக்கலாம். விஞ்ஞானம் கூறுவதும் இதுதான். 'Motion and sound are Co-relative' என்கின்றது.

விஞ்ஞானம் கூறுவது என்ன வென்றால் பிரபஞ்சம் பூராவும் சலித்துக் கொண்டே யிருக்கும் அணுக்களின் சேர்க்கை என்

பது. இந்த உண்மையை நமது முன்னோர்கள் பலபல நூற்றுண்டுகளுக்கு முன் கண்டு எழுதி வைத்திருப்பது மட்டுமல்லாமல் அதிலிருந்து அநேக உண்மைகளையும் தற்கால விஞ்ஞானம் கூட எட்டாத அளவுக்குக் கண்டிருக்கின்றனர். நாம் பார்க்கும் வஸ்துக்கள் யாவும் தோற்றத்துக்கு நிலையாகத் தோன்றினாலும், அந்த வஸ்துவின் ஒவ்வொரு அணுவும் ஆடிக்கொண்டேதான் இருக்கின்றது. எப்பொழுது அசைவு நிரந்தரமாய் எப்பவும் இருந்து கொண்டேயிருக்கிறது. அப்போது ஓசையும் நிரந்தரமாய் இருந்துகொண்டேதான் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? நாம் பார்க்கும் வஸ்துக்களில் அடங்கிய அணுவின் அசைவு நம்மால் பார்க்கமுடியாதபடி எப்படி சூக்ஷ்மமாக இருக்கின்றதோ அது போலவே அந்த அசைவினால் ஏற்படும் ஓசையும் நம் காதால் கேட்க முடியாதபடி சூக்ஷ்மமாக வேதான் இருக்கவேண்டும்.

அசைவும் அதனால் ஏற்படும் ஓசையும் நான்கு விதமாக இருக்கவேண்டும். அசைவு என்பதை மந்த்ர சாஸ்திரங்கள் '**ஸ்பந்தனம்**' என்று கூறும். ஸ்பந்தனம் என்ற சொல் '**ஸ்பந்த்**' என்ற தாதுவிலிருந்து உண்டானது. '**ஸ்பந்த்**' என்ற பதத்துக்கு 'துடிப்பு' (To Throb) என்று பொருள். ஆங்கிலத்தில் சொன்னால் Vibration என்று கூறலாம். அகவே அசைவு என்று கூறுவதைக்காட்டிலும் துடிப்பு என்று கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும். அசைவும் ஓசையும் நான்கு விதமாக இருக்குமென்று சொன்னோம். அது எப்படியெனில், இரண்டும் ஸ்தூலமாய் இருப்பது ஒரு நிலை. கல் சரிந்து விழும்போது ஏற்படும் அசைவையும் பார்க்கிறோம்; அதனால் ஏற்படும் ஓசையையும் கேட்கின்றோம்; ஒன்று சூக்ஷ்மமாயும் மற்றொன்று ஸ்தூலமாயும் இருக்கலாம். இதில் அசைவு சூக்ஷ்மமாயும் ஓசை ஸ்தூலமாயும் இருப்பது ஒன்று. இடி ஓசை கேட்கின்றோம். ஆனால் அசைவைப் பார்ப்பதில்லை. அதுபோல அசைவு ஸ்தூலமாயும், ஓசை சூக்ஷ்மமாகவும் இருக்கமுடியும். நாம் கையை ஆட்டினால் சலனம் தெரிகின்றது ஆனால் அது உண்டாகும் ஓசையைக் கேட்க நமது காதுகளுக்குப் போதிய சக்தியில்லை. இம்மூன்று நிலைகள் தவிர இரண்டு சூக்ஷ்ம

மாகவே யிருக்கும் நிலையும் இருக்கின்றது. முன்பு சொன்னபடி அணுக்களின் அசைவையும் பார்ப்பதில்லை. அதன் ஓசையையும் கேட்பதில்லை.

ஆனால் இந்த சூக்ஷ்ம ஸ்பந்தனங்களையும் சூக்ஷ்ம சப்தங்களையும் அறிந்தவர்கள் விசேஷ சக்தி வாய்ந்த மஹனீயர்கள் பலர் நம் நாட்டில் இருந்தனர். இன்றும் இருக்கின்றார்கள். தற்கால விஞ்ஞானிகள் கண்ட அணுக்களின் அசைவுகளையும் அதனால் உண்டாகும் நாதங்களையும் கண்டார்கள். அவர்களே 'மந்த்ரத்ருஷ்டர்கள்' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றவர்கள், ரிஷிகள் எனப்பட்டவர்கள். அவர்கள் தங்களுடைய யோக சாதனையாலும், தபஸ்ஸினாலும் பிரபஞ்சத்தில் உண்டாகும் சூக்ஷ்ம ஸ்பந்தனங்களையும் சூக்ஷ்ம சப்தங்களையும் தங்கள் ஞானத்ருஷ்டியில் கண்டு அனுபவித்தும் தங்கள் அனுபவங்களை நம் போன்றோருக்குச் சொல்லியும் வந்தனர்.

நாம் காணும் இந்த பிரபஞ்சம் எப்படி உண்டானது? எத்தனை ஜீவராசிகள்! எத்தனை நக்ஷத்திரங்கள்! எத்தனை சந்திர சூரியர்கள்! எத்தனை விதமான மரம் செடி கொடிகள்! எத்தனை விதமான உலோகங்கள்! இத்தனையும் ஒன்றுமில்லாத சூன்யத்திலிருந்தா பிறக்கும். சூன்யத்திலிருந்து சூன்யந்தான் பிறக்குமேயல்லாது, நானாவித நாம ரூப பேதமுடைய இந்த 'ஜகத்' உண்டாகுமா? சமயிகள் பலரும் பிரபஞ்சத்துக்கு மூல காரணம் 'கடவுள்' என்றே கூறுகின்றனர். அக்கடவுள் எத்தகையவர்? சமயங்கள் தோறும் கடவுளுக்கு பல பெயர்கள் சொல்லி அழைக்கின்றன. சைவ சித்தாந்திகள் 'சிவம்' என்கின்றனர். வேதாந்திகள் 'ப்ருஹ்மம்' என்கின்றனர். கிரேக்கர்கள் 'Logos' என்றனர். கிருஸ்துவர் 'Holy Father' என்கிறார்கள். மகம்மதியர் 'அல்லா' என்கின்றனர். இவ்வாறு பல திறப்பட்டுக் கூறப்படும் 'அது' அடிப்படையில் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றது. மாணிக்கவாசகர் 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம்' என்று பாடுகின்றார். இதற்கு இலக்கணம் என்ன? இன்னதென்று குறித்துக் காட்டக் கூடியதற்கல்லவா லக்ஷணம் கூற முடி

யும்? பிரபஞ்சத்தை ஆராய்ந்து 96 தத்வங்களாகக் கணக்கிட்டு ஒவ்வொன்றையும் இது வல்ல, இதுவல்ல என்று தள்ளி எஞ்சி நிற்பது எதுவோ அது என்றுதான் கூற முடியும். வேதமும் நேதி நேதி' என்று கூறும். 'மறைகளும் மயங்கும்' என்றார் கந்த புராண ஆசிரியர்.

" யதோ வாசோ நிவர்த்தந்தே
அப்ராப்ய மனஸா ஸஹ " என்கின்றது சுருதி.

" வாசித்துக்காண வொணாதது,
பூசித்துக் கூடொணாதது,
வாவிட்டுப் பேசொணாதது." என்கிறார் அருணகிரியார்.

" யத்தத் அத்ரேச்யம், அக்ராஹ்யம்,
அகோத்ரம், அவர்ணம், அச்சக்ஷு:
ச்ரோத்ரம், ததபாணிபாதம், நித்யம்,
விபும், ஸர்வகதம், ஸுஸூக்ஷ்மம், ஸர்வபூத
[யோனிம் "

என்கின்றது. முண்டகோபநிஷத், நாமரூப ரஹிதமானது; சித்தாய்த் தனித்திருப்பது; ஸர்வ சாக்ஷியாய் பற்றற்று நிற்பது; உபாதி ரஹிதமானது; நிர்குணகேவலமானது.

" உருவன்று, அருவன்று, உளதன்று, இலதன்று,
இருளன்று, ஒளியன்று, என நின்றது "

என்பது அருணகிரியார் வாக்கு. அனாதி முத்தன் என்றது சித்தாந்தம். இதனை 'கந்தழி' என்றான் தமிழன். இந்த நிருபாதிக ஸம்வித் ரூபமான பிருஹ்மத்தில் அக்னியில் சூடுபோல அபின்னமான ஒரு சக்தி ஒடுங்கிக் கிடக்கின்றது. இந்த சக்தியே பிருஹ்மத்தை சிருஷ்டியோன் முகமாக்குகிறது. இந்த சக்தியைப் பெண்பாலாகவும், சிவத்தை ஆண்பாலாகவும், கூறுவது மரபு.

இந்த சக்தியை 'ஆதி சக்தி' என்றும், பரை என்றும், குடிலை என்றும், மாயை என்றும், லலிதை என்றும், காமேஸ்வரி என்றும், இன்னும் பற்பல நாமங்களால் வேதாந்த, சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இந்த சக்தியின் அதிஷ்டானத் தாலேயே சிவம் தொழிற்படுகின்றது. அதாவது சக்தியின் அதிஷ்டானத்தால் நிரூபாதிக சம்வித்ரூபமான சிவத்தில் ஒரு துடிப்பு (Vibration), ஸ்பந்தனம் ஏற்படுகின்றது. ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். இந்த ஸ்பந்தனத்தின் காரணமாக சப்தம் அல்லது ஓசையும் உண்டாகியிருக்க வேண்டும். இந்த ஸ்பந்தன சப்தங்களே சிருஷ்டியின் முதல் தோற்றமாக இருக்கவேண்டும். இவற்றைத்தான் சாஸ்திரங்கள் **பிந்து, நாதம்** என்று கூறுகின்றன. சப்த பிரபஞ்சம் அதாவது சொற்கூற்று உலகம், அர்த்த பிரபஞ்சம் அதாவது பொருள்கூற்று உலகம், இரண்டும் இந்த நாத பிந்து தத்துவத்தில் ஆலம் விதையில் மரம் அடங்கிக்கிடப்பது போன்று இருக்கின்றன. தன்னுள் சகலத்தையும் அடக்கியிருக்கும் இந்த நிலையில் புராணங்கள் '**ஹிரண்ய கர்பர்**' என்று கூறும். இந்த நிலையிலும் சக்தியும் சிவமும் ஒன்றுடொன்று இசைந்தே '**அர்த்த நாரி**' யாக இருக்கும். சங்கரர் பிருஹ்மஸூத்ர பாஷ்யத்தில் ஒரு இடத்தில் எல்லா தேவதைகளும் வாக்கிலிருந்தே உண்டானார்கள் என்று பொருள்படக் கூறியுள்ளார். விவிலியன் நூலில் 'At first there was the word, the word was with God. The word was God' என்றிருப்பதின் உள் பொருளும் இது வாகத்தான் இருக்கமுடியும். இந்த முதல் சப்தமும் ஸ்பந்தனமுமே சிருஷ்டியின் முதல் தோற்றம். இதுவே பிரணவம். இதுவே மற்றெல்லா மந்த்ரங்களுக்கும் ஆதி. இவ்வாறு ஆரம்பித்த சிருஷ்டி படிப்படியாய் விரிகின்றது. அதை சித்தாந்த சாஸ்திரம் இவ்வாறு கூறும்.

"சிவத்தில் சக்தி தோன்றி, சக்தியில் நாதம் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவம் தோன்றி, சதாசிவத்தில் மஹேச்வரம் தோன்றி, மஹேச்வரத்தில் ருத்ரன்

தோன்றி, ருத்ரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிருஹ்மா தோன்றி, பிருஹ்மாவில் ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில் வாயு தோன்றி, வாயுவில் அக்னி தோன்றி, அக்னியில் அப்பு தோன்றி, அப்புவில் பிரதிவி தோன்றி, பிரதிவியில் புல், பூண்டு, மிருக பக்ஷி, நரர்கள் தோன்றுகிறுர்கள். என்று இங்கு சதாசிவம், மஹேசுவரன், ருத்ரன், விஷ்ணு பிருஹ்மா, என்று கூறுவதெல்லாம் சிருஷ்டியின் விகாசத்தில் பல நிலைகளே தவிர நாம் வழிபடும் முகூர்த்தங்களாகக் கருதக்கூடாது. தைத்தரீய உபநிஷத்தில்

" தஸ்மாத் ஆத்மன :। ஆகாசஸ்ஸம்பூத :।
ஆகாசாத் வாயு :। வாயோரக்நி :।
அக்னேராப :। அப்தய : ப்ருதிவி।
ப்ருதிவ்யோஷதய :॥ "

என்று கூறுகின்றது. இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி பிரபஞ்சமாக விரிகின்றது. அவ்வாறு ஒன்றிலிருந்து மற்றென்று தோன்றும் காலத்தில், ஸ்பந்தன சப்தங்களும் தோன்றியே இருக்க வேண்டும். உதாரணமாக ஆகாசத்திலிருந்து வாயு தோன்றிற்று என்றுல் ஆகாச தன் மாத்ரையில் ஒரு ஸ்பந்தனமும் சப்தமும் தோன்றித் தானே இருக்க வேண்டும். ஆகவே அந்த ஸ்பந்த சப்தமே பின்னுல் தோன்றும் தத்துவத்துக்கு 'பீஜம்' அல்லது முளை, அல்லது மூலம் ஆகின்றது. ஸ்பந்தனம் என்பது அசைவு அல்லது துடிப்பு என்று முன்பே சொன்னேம் அசைவாய் இருந்தால் அதற்கு ரூபம் இருக்கவேண்டு மல்லவா ? ரூபமும் சப்தமும் சேர்ந்ததுதான் பீஜாக்ஷரம் அல்லது முளைஎழுத்துக்கள் என்றுகூறப் படுவன. அக்னியிலிருந்து தண்ணீர் தோன்றிற்று என்றுல் அக்னி தத்துவமான ரூப தன் மாத்ரையில் தண்ணீரின் தன்மாத்ரையான ரஸம் உண்டானது என்று தான் பொருள் கொள்ளல்வேண்டும். அதாவது தன்மாத்ரைகள் என்பவை சூக்ஷ்ம அணுக்கள். அணுக்களுக்குள் வித்தியாசமே கிடையாது. ஆனுல் அவற்றின் வேகம், எண்ணிக்கைக்குத் தகுந்தபடி வெவ்வேறு பொருள்களாய் தோன்றுகின்றன. ஆகவே ரூப தன்மாத்ரைகள் என்ற அணுக்

கள் தம்முடைய வேகத்தால் வேறு அணுக்களையும் தம்முள் இழுத்துக்கொள்வதால் ரூப தன்மாத்ரை தோன்றுகின்றது. இது தான் நம் முன்னோர் கண்டதும், தற்கால விஞ்ஞானம் கண்டதும். ஆனால் தற்கால விஞ்ஞானம் அணுக்களின் எண்ணிக்கைகளைக் கண்டாலும் அவற்றின் ரூபத்தையும், சப்தத்தையும் அறியவில்லை. அதையும் கண்டவர்கள் நமது மந்த்ர திருஷ்டர்கள்.

இதிலிருந்து நாம் அறிவதென்ன; ஒரு குறிப்பிட்ட சலனத் தால் ஏற்படும் சப்தம் ஒரு பொருளை உண்டாக்கும் என்றால், அதே சப்தத்தை அதே அளவில் உச்சரிப்பதால் அதே ஸ்பந்தனத்தை உண்டு பண்ணி அதன் மூலம் அந்தப் பொருளையும் உண்டாக்க முடியும். ஓர் உதாரணம் மூலம் இதை விளக்கலாம். இதுவும் அடியேனுக்கு சமீபத்தில் சமாதியான சிருங்கேரி ஜகத்குரு ஸ்வாமி களின் அனுக்ரஹத்தால் காரைக்குடியில் 1925-ம் ஆண்டில் கிடைத்த வாய்ப்பு. ஸ்வாமிகளவர்கள் காரைக்குடியில் முகாம் போட்டிருந்தபோது அங்கு மழை இல்லாத காரணத்தால் ஜல கஷ்டம் சமாளிகக் முடியாத நிலையில் இருந்த நிலைமையை அறிந்த ஜகத்குரு ஸ்வாமிகள் வருண ஜபம் செய்தும், விராடபர்வம் வாசித் தும் உடனடியாக மழையை வரவழைத்தார்கள். அன்று அந்த அற்புதத்தைக் கண்டவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் நான் கூறுவதற்கு அத்தாக்ஷி கொடுப்பார்கள். அந்த அற்புதத் தைக் கண்டவர்களில் அடியேனும் ஒருவன். ஆனால் அடியேன் ஸ்வாமிகளவர்களிடம் இதன் ரகசியத்தைச் சொல்லவேண்டு மென்று கேட்டுக்கொண்டேன். அவர் சொன்னது "இதில் ஒன்றும் அதிசயம் இல்லை. விராடபர்வத்தில் வருண பீஜம் கிரம மாக வைக்கப்பட்டிருக்கின்றது. நானும் வருண ஜபம் செய்தேன் பீஜாக்ஷரங்களை கோர்வையாக 'சந்தஸ்' தவறாமல் பக்தியோடு சொன்னால் அதனால் உண்டாகும் சூக்ஷ்ம சலனங்கள் மழையைக் கட்டாயம் கொண்டுவரும்" என்று கூறினார். ஆயினும் இதன் உண்மையை அடியேன் அறிய பல ஆண்டுகளாயின. பல மந்த்ர சாஸ்த்திரங்களை வாசித்தும், பல பெரியார்களிடம் கேட்டும், அதன் பின்பே எனக்கு அன்று ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய உபதேச மொழியின் உண்மை துலங்கிற்று.

அதாவது எந்த ஸ்பந்தனத்தால் எந்த சப்தம் உண்டாகின்றதோ அதே சப்தத்தை அதே அளவில் ஜபிப்பதால் அதே ஸ்பந்தனத்தை உண்டாக்க முடியும். எந்தப் பொருள் உண்டாவதற்கு அந்த ஸ்பந்தனம் காரணமாய் இருந்ததோ அதே பொருளையும் உண்டாக்கலாம் என்பது. சொல்லுவது சுலபந்தான். ஆனல் எந்த நிலையிலிருக்கும் மனிதரால் இதைச் செய்யமுடியும் என்பதுதான் கேள்வி. அணுவைப் பிளக்கலாம் என்று யாரும் சொல்லிவிடலாம். ஆனல் அதற்கென்று யோக்யதாம்சம் முடைய விஞ்ஞானியேதான் அதைச் செய்ய முடியும். அதுபோல, வசாவாகச் சொல்லிவிடலாம். நமது ஜகத்குரு போன்ற மஹான்களாலேயே அதைச் செய்துகாட்ட முடியும். அவர் போன்று சாதனை, ஒழுக்கம் முதலிய சகல சற்குணங்களும் பொருந்திய பரிபக்குவ ஆத்மாக்களாலேயே செய்ய முடியும். அவ்வாறு நாம் ஒவ்வொருவரும் நம்மைத் தயார் செய்து கொள்ளலாம். அரிய சாதனை வேண்டும். நல்லொழுக்கம், குரு உபதேசம், பூர்வ ஜன்ம புண்ணியம் அவசியம் வேண்டும். அந்நிலையை அடைய சமய நூல்களும், சாஸ்திரங்களும் வழிகாட்டி யிருக்கின்றன. ஆனல் அவ்வழியில் செல்வோர்தான் மிகச் சொற்பமாக இருக்கின்றனர். வகுக்கும் வழியிலேயே செல்லாமலும், அதைப் பற்றிக்கூட கேட்காமலும் இருக்கும் பல சகோதரர்கள்தான் தற்கால பகுத்தறிவு ஆராய்ச்சியாளர்.

ஆகவே சப்தத்தின் விசேஷத்தை அண்டத்தில் வைத்து ஆராய்ந்ததில் நாம் கண்டுகொண்டது என்ன? சிருஷ்டியின் ஒவ்வொரு படியிலும் ஸ்பந்தனமும் சப்தமும் உண்டாகின்றன. அந்த ஸ்பந்தன சப்தங்களே அந்தந்த நிலையில் தோன்றும் தத்வங்களுக்கு பீஜாக்ஷரங்களாக அமைந்தன. அந்த சப்தங்களை அதே அளவில் முறையாக உச்சரிப்பதால் அதே ஸ்பந்தனங்களையும் அவற்றின் மூலம் அந்தப் பொருளையும் உண்டாக்க இயலும் என்பது. இதுவே மந்தரங்களின் அடிப்படையான தத்துவம். மந்தரங்கள் என்பவை சூக்ஷ்ம சலனங்களை உண்டு பண்ணக் கூடிய சப்த ஜாலங்கள். மந்த்ரங்களுக்குப் பொருள் அவசியமில்லை.

அநேக மந்த்ரங்கள் வெறும் எழுத்துக் கோர்வையாகவே இருப்பதைப் பார்க்கலாம். அவற்றின் உச்சரிப்பு 'சந்தஸ்' தான் முக்கியம்.

இனி அண்டத்தின் சப்தம் அல்லது 'வாக்' என்பதை ஆராய்ந்தது போல பிண்டமாகிற நமது தேகத்திலும் ஆராய வேண்டும். அண்டத்தில் இருக்கும் சப்தங்கள் அநேகமாக த்வனியாத்மக மாகவேயிருக்கும். அதாவது யாதொரு பொருளையும் உணர்த்தாத சப்தங்கள். ஆனால் பிண்டத்தில்தான் பர, பச்யந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு பாகுபாடு களோடு சப்தங்களைப் பார்க்கிறோம். அண்டத்தில் தோன்றும் த்வனியாகத் மகமான சப்தங்களை வர்ணாத்மக மாக்கும் இயல்பு நமது சரீரத்தில் தான் இருக்கிறது. அதனால் மந்த்ர சாஸ்திரத்தில் அடிப்படை நமது சரீரத்தில் தோன்றும் பர, பச்யந்தி, மத்திமை, வைகரி என்ற சப்த பாகுபாடு களேயாகும். அண்டத்தின் பரவாக் என்பது நாத பிந்து கலை என்பதை முன்பு சொன்னோம். அதுதான் பிரணவம் என்றும் கூறினோம். அதுபோன்று பிண்டம் என்ற நமது சரீரத்திலும் பரவாக் இருக்கின்றது. நமது சரீரத்தை பிண்டம் என்றும் க்ஷுத்ர பிருஹ்மாண்டம் என்றும் கூறும். அதாவது சிறிய அண்டம். ஏனெனில் அண்டத்திலுள்ள அத்தனைத் தத்வங்களும் இப்பிண்டத்திலும் உள.

ஓசையானது இருவிதம் என்றும் அதாவது பொருளோடு இயைந்தது ஒன்று பொருளோடு இயையாதது ஒன்று என்று முன்பே கூறினோம். பொருளோடு இயைந்த ஓசைகளுக்கு வர்ணாத்மகம் என்றும் பொருளோடு இயைபு இல்லாத சப்தங்களுக்கு த்வனியாத்மகம் என்றும் சொல்லுவார்கள். ஒரு பொருளைக்குறிக்க ஒரு சொல்லை உச்சரிக்கிறோம். மரம், இடி, கல் என்ற சொற்கள் சப்த மாத்திரமாய் நமது காதில் விழும்போது ஒரு பொருளை நம் மனதில் கற்பித்துக் கொள்ளுகிறோம். அந்தச் சொல்லும் பொருளும் பிரிக்க முடியாதவை. கூர்ந்து ஆராய்ந்தால் நமது சொற்களில் பல அச்சொற்களால் குறிக்கப்படும் பொருளின் இயற்கையான ஓசையை அடிப்படையாகக் கொண்ட காரணப் பெய

ராகவே இருப்பதைக் காணலாம். மொழி நூல் வல்லுனர் இதை ஆராய்ந்திருக்கின்றனர். உதாரணமாக மாகரல் கார்த்திகேய முதலியார் என்பவர் தாம் இயற்றிய 'மொழி நூலில்' பல தமிழ் சொற்கள் ஓசை வழி பிறந்தன என்பதை நிரூபித்திருக்கிறார். அநேக சொற்களின் ஆரம்பம் நமக்கு மறைந்து விட்டதன் காரணமாக அவை காரணப்பெயர் என்பதையும் நாம் மறந்து இடுகுறிப் பெயராகவே கருதுகிறோம்.

நிற்க வைகரி வாக்கானது வாயால் பேசப்பட்டு கேட்பவர் காதில் எழும் ஓசைகளே, இவ்வாறு ஸ்தூலமான ஓசையை அடையு முன்பு அந்த ஓசை வாயிலிருந்து மட்டும் வெளிப்படவில்லை. நமது சரீரத்தின் பல இடங்களிலிருந்து ஆரம்பிக்கின்றன என்பதை உணரலாம். சில எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். இதன் உண்மை தெரியும். க என்ற எழுத்து தொண்டையில் ஆரம்பித்து பின் வாயில் வெளியாகின்றது. அதையே அழுக்கி (க ³ க ⁴) என்று உச்சரித்தோமானால் ஹ்ருதயம், நாபி, முதலிய இடங்களிலிருந்து ஆரம்பிப்பதை உணரலாம். ஹ, க்ஷ, முதலிய எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாபிக்கும் கீழே மூலாதாரத்தில் புறப்படுவதையும் உணரலாம். இதுபோன்று மற்ற எழுத்துக்களையும் உச்சரித்து பரீக்ஷை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். ஆகவே ஸ்தூலமாய் வெளிப்படும் சப்தங்கள் முதலில் நமது சரீரத்தின் மற்ற பாகங்களில் ஆரம்பிக்கின்றன என்பது தெளிவு.

அண்டமானது சிவ சக்தி ஸம்மேளனம் என்று கூறினோம். அதே போன்று நமது உடலிலும் இந்த இரண்டு கூறுகள் உள. ஆத்மா வென்பது பிருஹ்ம ஸ்வரூபம். சக்தி ஸ்வரூபம் குண்டலினி சக்தி. ஆத்மாவும் குண்டலினியுமே நமது சரீரத்தில் இருந்து தொழிற்படுத்துகின்றன. இந்த குண்டலினி சக்தியானது மூலாதாரத்தில் ஸர்ப வடிவமாய் $3\frac{1}{2}$ சுற்றுச் சுற்றி குண்டலாகாரமாய் உறங்கிக் கொண்டிருக்கின்றது என்று யோக சாஸ்திரங்களும் ஆகம நூல்களும் கூறுகின்றன. யோக சாதனையாலும், உபாஸனை பலத்தாலும் இக்குண்டலினியை எழுப்பி ஸுஷும்ன நாடி வழியாக மேலே ஏற்றி மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம்,

அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலே கொண்டுபோய் சிரசின் உச்சியிலுள்ள ஸஹஸ்ராரம் என்ற இடத்தில் சேர்ப்பதுதான் யோக சாதனை. குண்டலினி சக்தியானது மூச்சு விட்டுக்கொண்டிருக்கும். அதன் உச்வாச நிச்வாசமே ஸோஹம் என்ற அஜபா மந்த்ரம். இதுவே நமது பிண்டத்தின் பரவாக். இந்த ஸ்வாச சப்தமே நமது சரீரத்தில் உதிக்கும் சகல சப்தங்களுக்கும் ஆதி காரணம். இவ்வோசையானது பல்வேறு ஓசைகளாக மாறி 51 அக்ஷரங்கள் ஆகின்றது. அது எப்படியெனில் நமது சரீரத்தில் தசவித வாயுக்கள் இருக்கின்றன. விஞ்ஞானமும் ஒப்புக்கொள்ளுகின்றது. அவை பிராணன், அபானன், உதானன், வியானன் ஸமானன் என்ற ஐந்து பெரு வாயுக்களும் கிரிகரன், தனஞ்செயன், தேவதத்தன், நாகன், கூர்மன் என்ற ஐந்து உப வாயுக்களுமாகும். இவை நமது உடலில் உள்ள பல நாடிகளில் சஞ்சரித்துக் கொண்டு பல தொழில் செய்கின்றன.

வசனம், கமனம், தானம், விஸர்க்கம், ஆனந்தம் என்ற ஐந்தொழில்களும் ஐந்து கர்மேந்திரியங்கள் மூலம் செய்வது இந்த வாயுக்கள்தான். இவற்றுள் பிராணன் என்பது (Oxygen) அக்னியின் கூறு. இதுவே எல்லா வாயுக்களுக்கு முக்கியமானது. இது ஒன்று இல்லாவிடில் உயிரே இல்லை அதனால் தான் அதற்கு பிராணன் என்று பெயர். பிரதானமான வாயு என்று பொருள். இந்தப் பிராணன் ஸுஷும்னை, இடகலை, பிங்கலை என்ற மூன்று நாடிகளிலும் சஞ்சரிக்கும். குண்டலினியின் உச்வாச நிச்வாச சப்தமானது பிராண வாயுவோடு சம்மந்தப் பட்டு ஸுஷும்னையில் செல்லுங்கால் சில சப்தங்களும், இட கலையில் செல்லுங்கால் சில சப்தங்களும், பிங்கலையில் செல்லுங்கால் சில சப்தங்களும், உண்டாகின்றன. இட கலை என்பது சந்திர நாடி. பிங்கலை என்பது ஸூர்ய நாடி. ஸுழுமுனை என்பது அக்னி நாடி. ஆகையால் அந்தந்த நாடிகளில் உண்டாகும் சப்தங்களும் இம்மூன்று கூறுகவே இருக்கும். இந்த மூன்று வித ஓசைகளும் 51 விதமான ஓசைகளாக மிளிர்கின்றன. அவைகளே, அக்ஷரங்கள் அல்லது வர்ணங்கள்; அதாவது எழுத்துக்கள்,

லிபிகள், என்றெல்லாம் கூறப்படுவன. இவற்றில் மேற்சொன்ன படி நாடியின் பேகத்தால் சூரியன்கூறு, சந்திரன்கூறு, அக்னியின்கூறு என்று 51 அக்ஷரங்களும் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் **அ** முதல் **அ:** ஈருக உள்ள பதினுறு அக்ஷரங்களும் குண்டலினியின் உச்வாச சப்தத்தோடு பிராணவாயு இடகலை நாடி அதாவது சந்திர நாடியில் உற்பத்தி செய்வதால் அவற்றிற்கு சௌம்யாக்ஷரங்கள் என்று பெயர். ஸோமன் என்ருல் சந்திரன். **க** முதல் **ம** ஈருக உள்ள 25 அக்ஷரங்களும் பிங்கலை என்ற சூரிய நாடியில் பிறக்கின்றன. ஆனல் அவற்றிற்கு ஊஷ்மான அக்ஷரங்கள் என்றுபெயர். உஷ்ம என்பது சூரியனுக்கு ஒரு பெயர். **ய** முதல் **க்ஷ** ஈருக உள்ளவை ஸுஷும்னையில் பிறப்பிக்கின்றன. இவற்றிற்கு ஆக்னேய அக்ஷரங்கள் என்று பெயர். இந்த சப்தங்கள் அந்தந்த நாடிகளில் ஆரம்பிக்கும்போது பர சப்தமாயிருந்து, அந்தந்த நாடி வழியே ஹ்ருதயஸ்தானத்தை அடையும்போது பச்யந்தி சப்தமாகி அவை கழுத்து அல்லது தொண்டை (Throat) பிரதேசத்தை யடையும் போது மத்திமையாகி வாயால் உச்சரிக்கப்படும்போது வைகரியாகின்றன.

இது மட்டுமன்றி இந்த 51 லிபிகளையும் பிருதிவி அம்சம், அப்பு அம்சம், வாயுவு அம்சம், அக்னி அம்சம், ஆகாச அம்சம் என்றும் பிரித்திருக்கிருர்கள். இதன் தத்வம் என்னவென்ருல் முன்பு சொன்ன ஆறு ஆதாரங்களும் முறையே பிருதிவி, அப்பு, வாயு, ஆகாசம், மனஸ் என்ற தத்வங்கள் பொருந்தியவையாக மந்த்ர சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸுஷும்ன, இடகலை, பிங்கலை என்ற நாடிகளின் வழியாக சஞ்சரிக்கும் பிராணவாயு குண்டலினியின் ஸ்வாச சப்தத்தை ஏற்றிச் செல்லும்போது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் சப்தங்கள் அவ்வாறு 5 பிரிவுகளாகக் கூறப்படுகின்றன. அதன் விவரம். **க** வர்க்கம் 5-ம் வாயு அம்சம். **ச** வர்க்கம் 5-ம் அக்னி அம்சம். **ட** வர்க்கம் 5-ம் பிருதிவி அம்சம். **த** வர்க்கம் 5-ம் அப்பு அம்சம். **ப** வர்க்கம் 5-ம் ஆகாச அம்சம். இதுபோன்று **அ** முதல் **அ:** ஈருக உள்ள 16 எழுத்துக்களும் இவ்வைந்து கூருக வகுக்கலாம். அதுபோலவே **ய** முதல் **க்ஷ** வரை உள்ள எழுத்துக்களும் ஐந்து கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அக்ஷரங்களின் உற்பத்தியைப் பார்த்தோம். அதனால் நாம் தெரிந்துகொள்வது என்ன? அக்ஷரங்கள் நமது உடலில் பல்வேறு நாடிகளில் பல்வேறு இடங்களில் உண்டாகின்றன என்பதைக் கண்டோம். ஆகவே ஒவ்வொரு அக்ஷரத்தையும் உச்சரிக்கும்போது அதற்கு ஏற்பட்ட நாடியையும், அது உண்டாகும் ஸ்தானங்களாகிற ஆதார ஸ்தானங்களையும் பாதிக்கத்தானே செய்யும். மந்த்ரங்கள் என்பவை வர்ணங்களின் (எழுத்துக்களின்) சேர்க்கை என்பது முன்பே கூறப்பட்டது. ஆகவே வர்ணச் சேர்க்கையால் உண்டான மந்த்ரங்களை முறைப்படி ஜபிப்பதால் அந்தந்த ஓசைகளின் பரா, பச்யந்தி, மத்திமை என்ற ஸூக்ஷ்ம தமம், ஸூக்ஷ்ம தரம், ஸூக்ஷ்மம் என்ற சலனங்களால் அந்தந்த நாடிகளையும் வாயுக்களையும், ஸ்தானங்களையும் இயக்கமுடியும் என்று தோன்றுகிறது.

அண்டத்தில் ஒவ்வொரு தத்வமும் தோன்று முன்பு அதற்கு முந்திய தத்வத்தில் ஸ்பந்தனமும், சப்தமும் உண்டாகின்றன என்று சொன்னோம். அந்த ஸ்பந்தன சப்தங்களே அந்தத் தத்வங்களுக்கு பீஜாக்ஷரமாகும் என்றும் கூறினோம். பிண்டத்தில் உண்டாகும் ஓசை வேறுபாடுகள் அண்டத்தில் உண்டான ஓசை வேறுபாடுகளுக்கு ஒத்து இருந்ததையும் மந்த்ர திருஷ்டர்கள் கண்டார்கள். அப்படிக் கண்டதின் விளைவுதான் அண்டத்திலுண்டான த்வனியாத்மகமான சப்தங்கள் வரணாத்மக மாக்கப்பட்டன. உதாரணம் ஒன்று சொல்வோம். மூலாதாரம் என்பது பிருதிவி ஸ்தானம். அது ஸுஷும்ன நாடியின் அடிபாகத்தில் இருக்கிறது. அங்கு ஸுஷும்னையில் பிராணவாயு குண்டலினியின் சுவாச சப்தத்தோடு பிரவேசிக்கும் போது **லம்** என்ற சப்தத்தைக் கேட்டார்கள். (நீங்களும் உபாஸ்தியாலோ, யோகத்தாலோ கேட்கலாம்). இதே சப்தம் அப்பு தத்வத்திலிருந்து பிருதிவி தத்வம் உண்டாகும் சலனத்திலும் அண்டத்தில் கேட்டார்கள். அகவே '**லம்**' என்ற அக்ஷரம் பிருதிவியின் பீஜாக்ஷரம் என்று நிர்ணயித்தார்கள். இது போன்றே அண்டத்திலுண்டான ஸூக்ஷ்ம சலனங்களையும், ஸூக்ஷ்ம சப்தங்களையும், தபஸ் ஸித்தியால் கண்ட மந்த்ர திருஷ்டர்கள் அண்டத்திலும் கண்டு அவற்றை ஒன்றோடொன்று

பொருத்தி பல் வேறு மந்த்ராக்ஷரங்களையும் மந்த்ரங்களையும் தொகுத்தார்கள். இந்த ரகசியத்தை ஆராய்ந்து அறிந்தவர்களே மந்த்ரத்தின் உண்மையை அறிவார்கள். மந்த்ரத்தின் உற்பத்தியும் அவற்றின் காரணத்தையும் ஓரளவு கூறினோம். இனி மந்த்ரத்தின் வேறு சில விசேஷங்களையும் பார்ப்போம்.

மந்த்ரங்களையும், மந்த்ர சாஸ்திரங்களையும் இவ்வளவு ரகஸ்யமாய் வைத்திருப்பதற்கு என்ன காரணம்? மந்த்ரத்தின் முக்கியத்வம் அதன் பொருளல்ல என்பதை முன்பு கூறினோம். மந்த்ரம் என்பது ஸூக்ஷ்ம சலனங்களை உண்டுபண்ணக்கூடிய சில எழுத்துக்களின் சேர்க்கைகள். இந்த சலனங்கள் சப்தத்தாலேயே உண்டாக்கப்படுகின்றன. ஆகவே குறிப்பிட்ட சலனத்தை உண்டாக்கக் குறிப்பிட்ட சப்தத்தாலேயேதான் முடியும். அந்த குறிப்பிட்ட சப்தத்தின் அழுத்தம், பரிமணம், அளவு உச்சரிக்கும் முறை என்பதெல்லாம் அறிந்தால்தான் மந்த்ரத்தை முறைப்படி ஜபிக்கமுடியும். இதைத்தான் '**சந்தஸ்**' என்று வடமொழி கூறும். '**சந்தஸ்**' என்ற பொருள் பற்றி ஒரு சாஸ்திரம் வகுத்திருக்கிறார்கள். அது ஆறு சாஸ்திரங்களில் ஒன்று. வேதங்களை உச்சரிக்கும் முறை மந்த்ரங்களை உச்சரிக்கும் முறை அதற்குத் தகுந்த குரல் ஏற்ற இறக்கம், இசை ஸ்வரம், என்பதெல்லாம் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அதை வாசிப்பதாலேயே நாம் சரியான பிரயோக முறையை கற்றுக்கொள்ள முடியுமா? உதாரணமாக, ஒரு ராகத்து ஆரோகண அவரோகண ஸ்வரங்கள் கொடுத்திருப்பதை வாசிப்பதாலேயே ஒருவன் அந்த ராகத்தை பாடிவிட முடியுமா? அதை குருவாக இருப்பவன் பாடிக்காட்டினாலன்றி தெரியாதல்லவா? அதுபோல **சந்தஸ்** என்பதை குருமுகமாகவேதான் தெரிந்து கொள்ள முடியும். இதனாலேயேதான் வேதங்களுக்கு பயிற்கியளிக்க பாடசாலைகளும் இருக்கின்றன. ஒரு மந்த்ரத்தின் உச்சரிப்பு, அளவு, இசை, பரிமாணம், ஏற்றம், இறக்கம், அழுத்தம் என்ற முறையில் ஒருவர் சொல்லி மற்றொருவர் கேட்டாலன்றி மந்த்ர உபாஸனை பலன் தராது. ஒருவேளை விபரீத பலனை யளித்தாலும் அளிக்கும். குறிப்பிட்ட சப்தத்தால் உண்டாக்கப்பட வேண்டிய ஸ்பந்தனம் அல்லது அசைவை வேறு முறையால் உண்டாக்க

முடியாது என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதனு லேயே மந்த்ர சாஸ்திரம் கர்ண பரம்பரையாய் குரு சிஷ்ய வரிசை யில் நமக்கு வந்திருக்கின்றது. இவ்வாறு உபதேசம் பெற வேண்டிய சீடனும் குருவுக்கு உகந்தவனுக, அருகதை உள்ளவனுக இருந்தாலல்லது உபதேசம் பெற முடியாது. ஆத்ம பரிபக்குவம், ஒழுக்கம், பூர்வ வினை முதலிய பல அம்சங்கள் இதில் கருப்படுகின் றன. அவை யாவும் பொருந்தினவனையே சாஸ்திரங்கள் 'அதிகாரி' என்ற பெயரால் அழைக்கின்றன.

நூல்களை வாசிப்பதால் மந்த்ரத்தின் பொருள், பெருமை, பலன் என்பவற்றை அறியலாமே ஒழிய அதை ஜபிக்கும் முறை, கால அளவு முதலியவற்றை அறிய முடியாது. உதாரணமாக, மந்த்ரங்களுக்கெல்லாம் சிறந்ததாகக் கருதப்படும் 'பஞ்ச தசாக்ஷரீ' என்ற அம்பாளின் மந்த்ரத்தைப் பற்றிய நூல்களில் வரிவச்யா ரகசியம், த்ரிகூட பாஷ்யம், பரசுராம கல்பஸூத்ரம், தந்த்ர ராஜ தந்த்ரம் போன்ற அனேக அருமையான கிரந்தங்கள் இருக்கின் றன. வரிவச்யையில் ஒவ்வொரு அக்ஷரத்தின் கால அளவும் கொடுக்கப்பட்டும் இருக்கின்றது. யாராவது அதை வாசித்து விட்டு பஞ்சதசியை ஜபிக்க முடியுமா என்று முயன்று பாருங்கள். மேலும் ஒவ்வொரு மந்த்ரத்துக்கும் வியாக்ருதிகள் என்று ஒரு பாகம் உண்டு. அவை சாதாரணமாய் ஆறு கூருக இருக்கும். அவை ரிஷி, சந்தஸ், தேவதை என்ற மூன்றும் பீஜம், சக்தி, கீலகம் என்ற மூன்றுமாகும். பின் சொன்ன மூன்றும் சில ரகசியமான அக்ஷரங்களே. அவற்றையும் சேர்த்தே மந்த்ரத்தோடு உச்சரிக்க வேண்டும் என்ற நியதியும் உள்ளது. அவற்றை எப்படி மந்த்ரத்தோடு பொருத்துவது, எந்தக்கால அளவில் அவற்றைச் சொல்வதுஎன்பதெல்லாம் குருநாதன்சொல்லிக்கொடுக்கவேண்டும்.

ஒரு மந்த்ரத்தின் 'ரிஷி' என்பவர் அதை முதல் முதலில் கண்டுபிடித்த மந்த்ர திருஷ்டர். அதாவது அவர் அந்த மந்த்ரத்தால் ஏற்பட்ட ஸூக்ஷ்ம சலனங்களையும், சப்தங்களை அனுபோக முறை யில் நேரில் கண்டு அதன் பயனையும் அனுபவித்து நமக்குக் கொடுத் திருக்கிறார். அவரை முதலில் கூறி நமக்கு உபதேசம் பண்ணும்

குரு, அவருடைய குரு என்று மூன்று பரம்பரை சொல்லி முதன் முதல் கண்ட மந்த்ர திருஷ்டரோடு அவர்களையும் அவர்கள் மூலம் நம்மையும் தாரதம்யம் செய்துகொள்ளவேண்டும் எப்படி எலெக்ட்ரிக் கரண்டு உண்டாகும் இடத்துக்கும் நம் வீட்டில் இருக்கும் சுவிட்சு போர்டுக்கும் (Switch Board) நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும், ஸப் ஸ்டேஷன், டிரான்ஸ்பார்மர், போஸ்டு மெயின் சுவிட்சு என்று பல படிகள் வழியாக நமக்கு கரண்டு கிடைப்பது போலத்தான் இதுவும். மின்சார சக்தி உற்பத்தியாகும் கேந்திரமே ஆதி மந்த்ர திருஷ்டன். நமது குருதான் நம் வீட்டிலிருக்கும் Switch Board அவருடைய குருதான் (பரம குரு) எந்த இடத்திலிருந்து நம் வீட்டுக்கு கனெக்ஷன் கொடுக்கப் படுகிறதோ அது. அவருடைய குரு (பரமேஷ்டி குரு) தான் Sub Station அல்லது Transformer. நாம்தான் வீட்டிலிருக்கும் பல்பு. பல்பு இல்லாவிட்டாலும், fuse ஆகிவிட்டாலும் அதன் சக்தி குறைந்திருந்தாலும் மின்சாரத்தால் பயனடைய முடியாதது போல நாம் அருகதையுடையவர்களாக இல்லாவிடில் மந்த்ர உபாஸனையால் யாதொரு பயனும் அடைய இயலாது.

நிற்க சில மந்த்ரங்களின் பரிமாணம், அல்லது அளவு முக்கியமானதாக இருக்கும். யோகாப்யாஸம் பழகுகிறவர்கள் அல்லது சுவாஸ பயிற்சி செய்கிறவர்கள் பிராண வாயுவை பூரகம், கும்பகம் ரேசகம் செய்யும்போது பிராண வாயுவை குறிப்பிட்ட அளவுதான் பூரகம் பண்ணவேண்டும், குறிப்பிட்ட கால அளவு கும்பகம் பண்ணவேண்டும், குறிப்பிட்ட கால அளவில் அதை ரேசகம் செய்யவேண்டும் என்ற நியதிக்கு மந்த்ரத்தின் அளவு பயன் படுகிறது. ஒரு மந்த்ரத்தை குறிப்பிட்ட அளவில் ஜபித்து பூரகம் பண்ணி அதே மந்த்ரத்தை ஒருமுறை அல்லது இருமுறை ஜபிக்கும் காலம் கும்பகம் செய்து அதே மந்த்ரத்தை ஒருமுறை ஜபிக்கும் காலத்தில் ரேசகம் செய்யவேண்டுமென்ற நியதி உண்டு. அதில் நாம் உள் வாங்கும் பிராணவாயுவின் அளவு அந்த மந்த்ரம் உச்சரிக்கும் கால அளவானல் அந்த மந்த்ரத்தை குறிப்பிட்ட முறைப்படி உச்சரிப்பதாலேயே தேவையான அளவு பிராண

வாயுவை உட்கொள்ளமுடியும். இந்த வகையிலும் மந்த்ரங்களின் கால அளவு அவசியமாகின்றது. இதையும் குருமுகமாயல்லாது வேறு சாதனங்களால் அறிவது அரிதன்றோ (பூரகம் என்றால் உள்ளே இழுப்பது, கும்பகம் என்றால் உள்ளே அடக்குவது ரேசகம் என்றால் வெளியே விடுவது)

இனி மந்த்ரங்களின் ப்ரயோக முறைகளையும் ஒரு சிறிது ஆராய்வோம். இதையும் பல திறப்பட்டனவாக வகுத்துள்ளார்கள். அவற்றில் இரண்டு பாகுபாடுகளை மட்டும் ஈண்டு குறிப்போம். முழுதும் எழுதுவதற்கு இடமும் இல்லை. பயனும் தராது. முதலாவது பிரயோக முறையில் அதன் லட்சியத்தைப் பொருத்து 1. வச்யம், 2. ஆகர்ஷணம், 3. மோஹனம். 4 ஸ்தம்பனம் 5. வித்வேஷணம், 6. மாரணம், 7. உச்சாடனம், 8 ஆப்யாயனம் என்று எட்டு வகைகள் உண்டு. இந்த எட்டு வகை மந்த்ரங்களுக்கும் அவற்றின் முடிவான பதச்சேர்க்கைகளே வித்யாசமுடையன. உதாரணமாக 'ஹூம்' என்ற பதச்சேர்க்கை வச்யம், உச்சாடனம், ஆகர்ஷண மந்த்ரங்களுக்கும், 'பட்' என்பது மாரண மந்த்ரங்களுக்கும், 'நம:' என்பதை ஸ்தம்பனம், வித்வேஷணம், மோஹன மந்த்ரங்களுக்கும், 'வௌஷட்' என்பதை ஆப்பாயன மந்த்ரங்களும், சேர்ப்பது மரபு. இந்த ஈற்றுச் சொற்களைக் கொண்டு அந்தந்த மந்த்ரத்தின் பிரயோகம் கூறப்படும். மந்த்ரம் ஒன்றேயாயினும் இந்த ஈற்றுப் பதச் சேர்க்கையால் அது பல திறப்பட்ட உபயோக மாகலாம். இன்னொரு முறையில் மந்த்ரங்கள் நான்கு வகையாக வகுக்கப்படுகின்றன அவை 1. சித்தம், 2. ஸாத்யம், 3. ஸ்வஸிதம், 4. ரிபு என்பவை. 1. சித்தம் என்பவை ஜபிப்பதாலேயே கோரிய பலனை அளிக்கவல்லது. ஏகாக்ரமான மனதோடு பரிசுத்தமான நிலையில் குருமுகமாகக் கேட்ட மந்த்ரத்தை ஜபிப்பது இவை பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், அஷ்டாக்ஷரம், பஞ்சதசி போன்ற மஹாமந்த்ரங்கள். இவற்றை தீக்ஷை பெற்று குரு மூலமாக அடைந்து அனன்யாச்சிந்தையாய் ஜபித்து வரவேண்டும். 2. ஸாத்யம் என்பவை வெறும் ஜபம்மட்டு மல்லாமல் கூடவே சில கிரியைகளும் செய்யப் படவேண்டும். அதாவது துவஜாரோகணம்,

கும்பாபிஷேகம், யாகம், யக்ஞம், விவாகம் முதலிய கர்மாக்கள் செய்யப்படும் போது ஓதப்பட வேண்டிய மந்த்ரங்கள், 3. ஸ்வசித்தம் என்பன முதலில் சொன்னபடி உரு ஏற்றுமலும், இரண்டாவது சொன்னபடி கிரியைகள் இல்லாமலும் வெறும் பாராயண மாத்திரத்தில் பயனை அளிப்பன. அவை தோத்திர பாக்கள். வடமொழியிலும் தமிழிலும் இத்தகைய தோத்திரப்பாக்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை மஹான்களாலும், மந்த்ர திருஷ்டர்களாலும், மந்த்ராக்ஷரங்களை வைத்து பாடப்பட்ட ஸ்தோத்திரங்கள். இவைகளுக்கு தீக்ஷை முதலிய நியதிகள் தேவையில்லை. சாமான்ய ஜனங்களும் மந்த்ரங்களின் பயனையடையவேண்டும் என்ற கருணையால் ஆன்றோர் நமக்கு இத்தோத்திரப் பாக்களை அருளிப் போந்தனர். தேவார பாக்கள் பலவற்றில் மந்த்ராக்ஷரங்கள் பொதிந்து கிடக்கின்றன. பின்னுல் விளக்குவோம். 4. ரிபு. இது அபிசார மந்த்ரங்கள்; விவரிக்கத் தேவையில்லை. கீழ் கடையான காமியங்களைக் கோறிசெய்யப்படுவன.

பிரயோக அளவில் இவை வேருக இருப்பினும் அவற்றின் அடிப்படையான நுண் பொருளில் ஒன்றேதான். அதாவது மந்த்ர உபாசனையால் சில ஸூக்ஷ்ம சலனங்களை உண்டுபண்ணுவது என்பதுதான் இலட்சியம். அவ்வாறு ஸூக்ஷ்ம ஸ்பந்தனங்களை உண்டுபண்ண இயலாத சப்த ஜாலங்கள் மந்த்ரங்கள் ஆகா. முன் குறிக்கப்பட்ட இரண்டாவது பாகுபாட்டில் முதல் இரண்டும் சில குறிப்பிட்ட அதிகாரிகளேதான் செய்யமுடியும். தீக்ஷை, உபதேசம் என்ற முறையில், சிரவணம், மனனம், நிதித்யாஸனம், ஸ்வாநுபூதி அதாவது கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை கைகூடல் என்ற முறையில் பஞ்சாக்ஷரம் போன்ற மஹா மந்த்ரங்களை உபாஸ்தி செய்து வருவது ஆத்ம விகாஸத்துக்குப் பெரும் உதவியாய் இருக்கின்றன. முடிவில் சாக்ஷாத்காரத்தையே கொடுத்து பிறவித் துன்பத்தை ஒளிப்பன. இரண்டாவதான கிரியையோடு செய்யப்படும் மந்த்ரங்களும் அதற்கென்ற சில அதிகாரிகளே அத்யயனம் செய்தும், பயிற்சி பெற்றும் பழகி வருகின்றனர். புரோகிதர்கள், வைதீகர்கள், ஆதிசைவர்கள், குருக்கள்மார், மடாதிபதி

67957

கள் என்போராலேயே அவை அப்யஸிக்கப்பட்டு வருகின்றன. மற்றவர் பயிலக்கூடாது என்பதற்கு மந்த்ர சாஸ்திரங்களில் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

கிரியைகளோடு சேர்ந்த மந்த்ரங்கள் என்ற தொகுதியில் கோவில்களில் விக்ரஹங்களுக்குச் செய்யப்படும் அர்ச்சனையும் ஒன்று. அர்ச்சனை என்பது ஆலய வழிபாட்டில் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கின்றது. குறிப்பிட்ட தேவதையின் பல நாமாக்களைச் சொல்லி புஷ்பத்தைப் போடுவதுதான் அர்ச்சனை என்கின்றோம். இந்தச் சொல் 'அர்ச்' என்ற வடமொழி தாதுவிலிருந்து வந்தது. அதற்கு பல பொருள்கள் உண்டு. இங்கு இரண்டே பொருள்களை எடுத்துக்கொள்வோம். 1. To worship (வழிபாடு) என்றும் 2. To Establish, to fix, (ஸ்தாபிதம் செய்) என்றும் பொருள்கள் உள்ளன. தற்காலத்தில் கோயில்களில் ஏன் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது என்று கிளர்ச்சி எழும்பியிருக்கிறது. அதை ஆராயவேண்டியதும் அவசியமாகின்றது. நாம் சாதாரணமாய் அர்ச்சனை என்றால் குறிப்பிட்ட தேவதையை பல நாமாக்கள் சொல்லி புஷ்பம் சாத்துவதால் அந்த தேவதை உவந்து வரன் கொடுக்கும் என்ற நம்பிக்கைதான் கொண்டுள்ளோம். இந்த லட்சியம்தான் 'அர்ச்' என்ற பதத்தின் முதல் அர்த்தத்தைப் பொருத்ததாகும். ஆனால் ஆகம சாஸ்திர உண்மையறிந்தவர் இந்த சாமான்ய அர்த்தத்தைக் கொள்ளுவதில்லை. இரண்டாவதாகச் சொன்ன **'ஸ்தாபிதம் செய்தல்'** என்ற பொருளிலேயே அதை எடுத்துக் கொள்ளல்வேண்டும்.

நமது ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட படிவங்கள் கல்லாலும், செம்பாலும் ஆனவைதான். அவற்றை ஸ்தாபிதம் செய்யுங்கால் அவற்றிற்கு பல மந்த்ர ஸ்தாபனங்களாலும், கிரியைகளாலும், ஹோமம், பலி, அஷ்ட பந்தனம், மந்த்ர தீர்த்தம் முதலியவற்றால் கல்லாலும், செம்பாலும் ஆன படிவங்களுக்கு தெய்வ சான்னித்யம் உண்டாகும்படி ஆரோபணம் செய்கின்றோம். சில ஆலயங்களில் நல்ல மந்த்ர சக்தி வாய்ந்த யந்த்ர ஸ்தாபனங்களும் செய்யப் பட்டிருக்கின்றன. இந்த விக்ரகங்களும், சக்ரங்களும்

பூர்ண சக்தியோடு எப்பவும் இருக்க வேண்டுமானல் அவற்றிற்கு அவ்வப்போது சம்புரோக்ஷணம் போன்ற சாங்கியங்கள் செய்து வரவேண்டும். கோயிலுக்கு வரும் அடியார்கள் பலரும் பலதரப் பட்டவர்களாகவே இருப்பார்கள். யாவருமே இறைவன் அருளைக் கோறி வருபவர்களாக இருக்க முடியாது. பலர் சில தீய எண்ணங்ளோடும் ஆசார ஹீனர்களாயும் வருவார்கள். அவர்களின் வருகையால் ஆலயங்களின் ஸூக்ஷ்ம சக்திகள் பாதிக் கப்படுகின்றன. இந்த குறைபாட்டை அவ்வப்போது தீர்த்து வைத்தால் தான் ஆலயங்களில் சான்னித்யம் மங்காது இருக்கும். இதற்காகவேதான் உற்சவகாலங்களில் யாகசாலைகள் நிறுவப்படு கின்றன. இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட முகூர்த்தங்களின் சான்னித் யம் குறையாமல் இருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சாதனங்களில் அர்ச்சனையும் ஒன்று. அதனுல்தான் 'அர்ச்' என்ற சொல்லுக்கு 'To Establish, To fix,' என்ற பொருள் இருப்பதால், அர்ச்சனை என்பது 'பிரதிஷ்டை செய்தல்' 'ஸ்தாபித்தல்' 'பொருத்துதல்' என்று பொருள் கொள்ளவேண்டியிருக்கிறது. இம்முறையில் பார்த்தோமானுல் அர்ச்சனையின் போது சொல்லப் படும் நாமாக்களில் மந்த்ராக்ஷரங்கள் மறைந்து கிடக்கின்றனவென் றும் அவற்றுல் ஸூக்ஷ்ம சலனங்கள் உண்டுபண்ண இயலும் என்றும் அத்தகைய ப்ரயோகங்களால் ஆல்ய விக்ரஹங்களுக்கு சான்னித்தியம் உண்டாகும் என்றும் கூறவேண்டி யிருக்கிறது.

லலிதாஸஹஸ்ர நாமத்தை பாஷ்யத்தோடு வாசித்தவர்கள் இதனை நன்கு உணருவார்கள். அவற்றை விவரித் துரைக்க இங்கு அவகாசம் இல்லை. இந்தக் கோணத்தி லிருந்து பார்த்தால் ஸூக்ஷ்ம சலனங்களை உண்டு பண்ணக் கூடிய நாமாக்களிலேயே அர்ச்சனை பண்ணவேண்டு என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. அதற்கு மொழியின் முக்யத்வம் இல்லை. வட மொழியாயினும் சரி, தமிழாயினும் சரி, அவை ஸூக்ஷ்ம சலனங்களை உண்டு பண்ண முடியுமா என்பதுவே முக்கிய நோக்கம். ஆகவே பழக்கத்தில் இருந்து வரும் அர்ச்சனை மந்த்ரங்களை வேறு மொழியில் மொழி பெயர்ப்பது விரும்பத் தக்கதல்ல. பல உதாரணங்களால் இதை

விளக்கலாம், ஒன்றே ஒன்று கூறி மற்றதை அறிவாளிகளின் சிந்தனைக்கு விட்டு விடுகிறேன்.

விநாயகர் அர்ச்சனையில் "லம்போதரா" என்ற நாமா வருகின்றது. இதை மொழி பெயர்த்தால் "சால்வயிறன்" என்று பொருள் படுகிறது. தமிழில் "சால்வயிறன்" என்று கூறுவதால் கடவுளுக்குக் கோபம் வந்துவிடாது. "சப்பைக்கால் அண்ணன் பெருவயிறன்" என்றே ஒரு தமிழ் புலவர் பாடியுள்ளார். ஆனால் மந்த்ர சாஸ்திரப்படி லம்போதரா என்ற நாமா பெரு வயிறன் என்ற பொருளில் உபயோகப் படுத்தப்பட வில்லை. "லம்" என்ற பிருதிவி பீஜாக்ஷரம் அதில் அடங்கி இருக்கின்றது. விநாயகன் பிருதிவியின் அஷ்டாவதான தேவதை என்பதை யாரும் அறிவார்கள். ஆகவே, லம்போதரா என்றதை சால்வயிறன் என்று மொழி பெயர்ப்பதால் மந்த்ர சாஸ்திரத்தின் அடிப்படையான தத்வமாகின்ற ஸூக்ஷ்ம சலனம் ஏற்படுமா என்பதை மட்டும் சிந்திக்க வேண்டி யிருக்கின்றது. சில நாமாக்கள் மொழி பெயர்க்கவே முடியாமலும் இருக்கின்றன.

"ஓம் ஹ்ரீம் நம:" என்ற நாமாவை மொழி பெயர்ப்பது எப்படி? இன்னும் "யோனி நிலையாயை நம:" என்பதை மொழி பெயர்த்தால் எவ்வளவு விபரீதமான பொருளைத் தருகின்றது! யோனி என்பதற்கு மந்த்ர சாஸ்த்ரங்களில் பிரத்தியேகமான பொருள் கூறப்படுகின்றது. அது த்ரிகோணத்தைக் குறிக்கின்றது. த்ரிகுணாத்மகமான சக்தி என்பது அதன் உள்பொருள். சிருஷ்டிக்கப் பட்ட பிரபஞ்சம் பூராவுமே த்ரிபுடியாய் இருப்பதை சாஸ்திர பிரக்ஞை யுடையவர்கள் அறிவார்கள். அதை விவரிக்கவும் இங்கு அவகாசம் இல்லை. ஆதலால் வட மொழியில் இருக்கும் நாமக்களை மெழிபெயர்ப்பது என்பது விபரீதமான முடிவில் கொண்டு சேர்க்கும். அதற்காக தமிழில் வழிபாடு நடத்துவதைக் கண்டிப்பதாகக் கொள்ளவும் கூடாது. வடமொழி மந்த்ரங்களை தமிழில் மொழி பெயர்ப்பதைத்தான் கூடாது என்கின்றோம். மந்த்ராக்ஷரங்கள் இல்லையென்று கூற எவரும் துணியமாட்டார்கள்.

(மந்த்ரத்துக்குத் தொல் காப்பியர் இலக்கணம் கூறியிருக்கின்ருர்).

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப "

என்று இதனல் என்ன தெரிகின்றது. மந்த்ரத்தை வகுத்தவர்கள் நிறைமொழி மாந்தராய் இருத்தல் வேண்டும். நிறைமொழி மாந்தர் என்பவர்தான் வடமொழியில் மந்த்ர திருஷ்டர்கள். ரிஷிகள், மஹான்கள், இந்தக் கருத்தையே திருவள்ளுவர் விளக்கியிருக்கிருர்.

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும் "

என்ருர். மந்த்ரங்களை அறிந்தவர்களே நிறைமொழி மாந்தராவர். இக்காலத்தில் யாராவது தம்மை மந்த்ர திருஷ்டர்கள் என்று கூறிக்கொண்டு மந்த்ரங்கள் செய்ய முன் வருவார்களா? மேலும் மந்த்ரம் என்பதை 'மறைமொழி' என்ருர். அதாவது ரகசியமானது; மறைக்கப்பட்டது, என்பது தான் பொருளாகும். மறை என்பதற்கு வேதம் என்ற பொருள் கொள்ள சந்தர்ப்பம் இடங்கொடுக்கவில்லை. அது நிறைமொழி மாந்தரின் ஆணையில் கிளந்ததாகவும் வேண்டும். அந்தகைய நிறைமொழி மாந்தர்கள் தமிழில் அழகான ஸ்தோத்திர பாக்கள் நமக்கு அளித்துதான் போயிருக்கிருர்கள். மூவர் பாடிய தேவாரங்களில் பொதிந்து கிடக்கும் மந்த்ராக்ஷரங்களை ஆராய்ந்து பார்ப்பவர் அறிந்துகொள்ளுவர். அப்பரும், சம்பந்தரும், ஆழ்வார்களும் இத்தகைய மந்த்ர திருஷ்டர்கள். ஒன்று இரண்டு உதாரணம் இங்கு மிகையாகாது எனக் கருதுகிறேன். சம்பந்தரிடம் அவர் தகப்பனர் யாகத்துக்குப்பொன் வேண்டுமென்று கேட்டார். அப்போது அவர் திருவாடுதுறையில் தங்கியிருந்தார். இறைவனிடம் போய் 'இடரினும் தளரினும்' என்ற பதிகம் பாடினர். உடனேயே பொன் கிடைத்தது. அப்பாடலை மந்த்ர சாஸ்திர வல்லுனர் ஆழ்ந்து ஆராய்ந்தால் அதில் லக்ஷ்மீ பீஜாக்ஷரம் ப்ரயோகம் பண்ணப் பட்டிருப்பதை அறிவார்கள். அதுபோலவே அப்பரை நீற்றரையிலிட்ட ஞான்று பாடிய 'மாசில் வீணையும்' என்ற பதிகத்தில் மாயா பீஜம் பிரயோகமாகி

யிருப்பதைக் காணலாம். இதுபோன்று பல உதாரணங்கள் கொடுக்க முடியும். சமய குறவர் நால்வரும் மந்த்ராக்ஷர பிரயோகத்தால் பல அற்புதங்களைச் செய்து காட்டினர். அந்தந்த சந்தர்ப்பகங்ளில் பாடிய பாசுரங்களை மந்த்ர திருஷ்டியோடு பார்ப்பவர்களுக்கு அவற்றுள் புதைந்து கிடக்கும் மந்த்ராக்ஷரங்கள் புலப்படும்.

சிவாலய முனிவர் என்பவர் திருமுறைகள் பூராவும் ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்ய ஆசைப்பட்டார்; இயலவில்லை; அகஸ்தியரை அணுகினர்; அவர் திருமுறைகளிலிருந்து சில பாக்களைப் பொருக்கித் தொகுத்துக் கொடுத்து அவற்றை மட்டும் நித்திய பாராயணம் பண்ணுவதால் பூராத் திருமுறையும் பாராயணம் பண்ணினதாகும் என்று கூறினர். அவர் தொகுத்த பாசுரங்களில் சிவ பூஜை செய்பவருக்கு வேண்டிய அங்கங்கள் எட்டு என்றும் அவற்றில் அர்ச்சனை ஒன்று என்றும் அர்ச்சனைக்காக மூன்று பதிகங்களை எடுத்துக் கொடுத்திருக்கின்றார்.

"பந்து, வேற்று, கொன்றிவை மூன்றும்
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்"

என்று கூறப்படுகின்றது. அதாவது, பந்து, வேற்று, கொன்றை என்ற சொற்களால் தொடங்கும் பதிகங்கள் மூன்றும் நம் முன்னோரால் அர்ச்சனைக்கு பயன் பட்டு வந்தன என்று புலப்படுகின்றது. அப்பர் பாடிய திருக்கையிலாயப் பதிகம் மூன்றிலும் இருநூறுக்கு மேற்பட்ட நாமாக்கள் இருக்கின்றன. அதுபோன்று மாணிக்கவாசகர் பாடிய போற்றித்திரு அகவலும் அர்ச்சனைக்கு உகந்ததாகவே யிருக்கின்றது. இவ்வாறு நிறைமொழி மாந்தரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட மந்த்ராக்ஷரங்கள் நிறைந்த அர்ச்சனைப் பதிகங்கள் இருக்க, வடமொழி மந்த்ரங்களை தமிழில் மொழிபெயர்க்க முற்படுவது பெரும் தீங்கு விளைவிக்கும். இதெல்லாம் எதற்கும் மனம் தானே காரணம் மொழி எம்மொழியானல் என்ன? நான் புரிந்துகொள்ளும் மொழியில் சொல்வதில் என்ன ஆக்ஷேபணை என்றெல்லாம் கேட்கும் மேதாவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். மனம் தான் காரணம் என்பது ஒப்புக்கொள்ள

வேண்டிய விஷயம்தான். ஆனல் இப்படிச் சொல்லும் மேதாவி களின் மனம் எப்படி இருக்கும் என்று யாரால் காணமுடியும்? மனம் காரணம் என்ற நிலையை அடைந்தவர்களுக்கு அர்ச்சனைதான் எதற்கு? கண்ணப்பன் என்ற வேடன் செய்த அருள் வழிபாடும் சிவக்கோச்சாரியார் செய்த ஆகம வழிபாடும் பெரிய புராணத்தில் அழகாகச் சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. கண்ணப்பன் ஒப்ப தோர் அன்பு கொண்டவர்களுக்கு ஆகம கட்டுபாடுகள் தேவை யில்லைதான். ஆனல் தற்காலத்தில் அத்தகைய அடியார்கள் யார் உளர் என்பதுதான் கேள்வி. கட்டுப்பாடு, நியதி என்பதெல்லாம் அவசியம் இருக்கத்தான் வேண்டும். வாழ்க்கையின் எந்தத் துறை யிலும் கட்டுப்பாடு அவசியம். அதிலும் ஆத்மீகத் துறையில் கட் டுப்பாடு மிக மிக அவசியம். அஃதின்றேல் நோயாளியின் விருப் பத்துக் கேற்ப வைத்தியன் மருந்து கொடுத்த கதையாகத்தான் முடியும்.

இன்னொரு முக்கியமான விஷயம் கவனிக்க வேண்டும். கடவுள் ஒருவரே யாயினும் பல ஆலயங்களில் பல பெயர்களால் அழைக்கப் பட்டும் பல உருவங்களில் அமைக்கப்பட்டும் இருப் பதைக் காண்கின்றோம். ஆலய நிர்மாணங்களிலும், விக்ரக பிரதிஷ் டைகளிலும் ஆங்காங்கு வெவ்வேறு ஆகம முறைகளும் மந்த்ர பிர திஷ்டைகளும் கையாளப் பட்டிருக்கின்றன. ஆங்காங்கு ஸ்தாபிக் கப்பட்ட முகூர்த்தங்களுக்கு அந்தந்த் ஆகம மந்த்ர பிரயோகங்களை ஒட்டி ஆவிர்பாவம் வெவ்வேருக இருக்கும். அதனலேயே கோவில் கள் தோறு அர்ச்சனை மந்த்திரங்களும் வெவ்வேருக அமைந்துள் ளன. அர்ச்சனை மந்த்ரங்களால் விக்ர உறங்களுக்கு சான்னித்யம் ஏற்படு கின்றது என்ற உண்மையை ஒப்புக்கொண்டால் அந்தந்த முகூர்த்தத்துக்கு ஏற்பட்ட அர்ச்சனை மந்த்ரங்களே உபயோகத்தில் இருக்க வேண்டும்.

மந்த்ரம் என்பது ஓர் நெருப்புப்போன்றது. சிறந்த முறை யில் பயன் படுத்திக்கொள்ளலாம். தப்பான வழிகளில் சென்றால் நம்மையே எரித்துவிடும். வெறும் விளையாட்டல்ல. கல்பனையு மல்ல. மூட நம்பிக்கையுமல்ல. நல்ல முறையில் தற்கால விஞ்

ஞான அறிவும் ஒப்புக்கொள்ளும் முறையில் நிறைமொழி மாந்தர்களான மந்த்ருஷ்டர்களால் ஜீவாத்மாக்கள் உய்யும் பொருட்டு வைத்துப்போன மூலதனம். அதைப் போற்றி வருவது நமது கடமை. நம்மோடு ஒத்த காலத்தவராய்த் திகழ்ந்த ஈஜிப்து, கால்டியா, பாபிலோன், க்ரீஸ், ரோம் போன்ற நாகரீகங்கள் எங்கே? நாம்மட்டும் பண்டைய நாகரீகப் பண்பிலேயே இன்னும் இருப்பது எதனுல்? பாரத பூமி ஆத்மீய வழ்க்கையையே சத்மென நம்பி யிருந்தது தான் காரணம். இந்த ஆத்மீக வாழ்க்கை சீர் குலைந்தால் நமது கலாச்சாரமும் அழியும். ஆத்மீக வளர்ச்சிக்கு மேனுட்டினரும் நம்மை எதிர்பார்த்து நிற்கும் இக் காலத்தில் நம்மவரே நமது கலாச்சாரத்துக்கு ஊறுசெய்யத் துணிகின்றனர். அந்தோ! பரிதாபம்!

முன்பு கூறியபடி மந்த்ரசாஸ்திரம் என்ற நூல் தொகுதி கணக்கிலடங்காது. மந்த்ரசாஸ்திரங்கள் என்பவை பெரும்பான்மை ஆகம சாஸ்திரங்களேயாகும். ஆகம சாஸ்திரங்களே தந்த்ர சாஸ்திரங்கள் என்றும் கூறப்படுவன. ஆகமசாஸ்திரங்களில் பல மறைந்து விட்டன. ஸப்தகோடி மஹாமந்த்ரங்கள் என்று கூறப்படுகின்றது. அவற்றில் பதிகத்தில் இருப்பவை மிக சிலவே. மந்த்ரசாஸ்திர ஆராய்ச்சி நல்ல பலனைத்தரும்.

மேனுட்டு அறிஞர்களில் ஆர்தர் அவலான் என்றப் புனைப் பெயர் கொண்ட ஸர் ஜான் வுட்ராப் என்பவர் கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்தவர். அவர் நம் நாட்டுக்கு வந்து வடமொழிப் பயிற்சிப் பெற்று மந்த்ர சாஸ்திரங்களை வாசித்து அவற்றின் பெருமையைக் கண்டு பிரமித்து பல தந்த்ர சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பல எட்டு பிரதிகளை அச்சிட்டும், பேருதவி செய்திருக்கின்ருர். அவருடைய "வர்ணமாலா" அல்லது Garland of Letters என்ற ஆங்கில நூலை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும். அதில் மந்த்ரங்களைப் பற்றிய பல அரிய உண்மைகளை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கொடுத்திருக்கின்ருர. பிரும்மஞான சபையைச் சேர்ந்த லெட்பீட்டர் என்பவரும் கிருஸ்துவ மதக்குருக்களாய் (Bislpp) இருந்தும்கூட மந்த்ரசாஸ்திர பயிற்சி பெற்று பல நூல்கள் எழுதியும் உள்ளார். இவ்வாறு

மேனாட்டு அறிஞர்களும் வியக்கும்படியாக அமைந்து நமது பாரத பூமிக்கே பிரத்யேக உரிமையாக இருந்துவரும் மந்த்ர சாஸ்திர நுட்பங்களை நாம் படிக்கவேண்டும். முன்பே முகவுரையில் கூறியது போல இச்சிறு கட்டுரையில் என் சிற்றறிவால் இவ்வளவு பெரிய விஷயத்தைப்பற்றி புராவும் எழுத இயலாது. ஆயினும், தற்காலத்தில் மந்த்ர சாஸ்தரங்களில் ஓரளவு நம்பிக்கை குறைந்து வருவதால் அவற்றில் ஓர்ருசியும் பயனும் இருக்கின்றன என்பதை நேயர்களுக்குக்கூறி அவற்றை வாசித்து பயன் படும்படி தூண்டவே இக்கட்டுரை எழுதப்பட்டது. மந்த்ர சாஸ்திர விர்ப்பன்னர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு இக்கட்டுறையில் கு ற் ற ம் பல தோன்றலாம். நாழிமுகவாது நானாழி என்றபடி சிற்றறிவுக்கு எட்டியதை சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. குற்றங்களை க்ஷமிப்பதோடு அவற்றை அடியேனுக்குத் தெரிவித்தால் அ த ன் பயனை அடைவேன். திருமூலர் திருமந்த்ரம் ஓர் பெரிய மந்த்ரக் கருவூலம். அதில் பல பாடல் களுக்குப் பெரிய மேதாவிகளாலும் பொருள் கூற முடியவில்லை. அவர் சொன்ன வாசகத்தைக் கூறுவது இங்கு பொருத்தமாகும்.

"நான்பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடில்
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே".

67957

சுபம்.

N56

6A
2-152